செ. கு. எண்: 234 நாள்: 21.12.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 21.12.2018

பிரபல எழுத்தாளர் திரு. பிரபஞ்சன் அவர்கள் இன்று (21.12.2018) உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். அவருடைய மறைவு தமிழ் இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

புதுச்சேரியை சேர்ந்த எழுத்தாளர் திரு.பிரபஞ்சன் அவர்கள் மகாநதி, மானிடம் வெல்லும், சந்தியா, அப்பாவின் வேஷ்டி போன்ற எண்ணற்ற புதினங்களும்; நேற்று மனிதர்கள், விட்டு விடுதலையாகி, இருட்டு வாசல், ஒரு ஊரில் இரண்டு மனிதர்கள் போன்ற சிறுகதை தொகுப்புகளையும் எழுதியுள்ளார். திரு. பிரபஞ்சன் அவர்கள், 1995–ஆம் ஆண்டு ‘‘வானம் வசப்படும்’’ என்ற புதினத்திற்காக சாகித்ய அகாடமி விருதினை பெற்ற பெருமைக்குரியவர் ஆவார். திரு. பிரபஞ்சன் அவர்கள் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அரசுகளின் சிறந்த எழுத்தாளருக்கான விருதினையும் பெற்றுள்ளார்.

திரு. பிரபஞ்சன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், எழுத்துலக நண்பர்களுக்கும், அவரது எண்ணற்ற ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**